வீரர்கள் சர்வதேச அளவில், ஆசிய அளவில், காமன்வெல்த் நாடுகள் அளவில் பரிசு பெறுகிறார்களோ, அங்கெல்லாம் விளையாட்டுக் கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். குறிப்பாக வேலூரில் weight lifting champion—க்கு ரூ.2 கோடியே 65 இலட்சம் ரூபாய் கொடுத்து, சிறப்பான முறையில் விளையாட்டுகளை ஊக்கப்படுத்துகின்ற முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இங்கே தெரியப்படுத்திக்கொள்கிறேன். வரக்கூடிய காலங்களில் சிறப்பான முறையில் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துகின்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***61014—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, முதலக்கம்பட்டி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதி, முதலக்கம்பட்டி ஊராட்சி, மேல்மங்கலம் பிட்—II வருவாய்க் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேற்படி கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், கூடுதல் தலைமைச் செயலாளர்,

வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து செயற்குறிப்பு வரப்பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதியில் கிராம நிருவாக அலுவலகம் இல்லாத ஒரே பஞ்சாயத்து முதலக்கம்பட்டி பஞ்சாயத்தாக இருக்கிறது. இது ஏறத்தாழ 3,000 ஜனத்தொகை கொண்டது. இந்தப் பகுதி மக்கள் முதலக்கம்பட்டியிலிருந்து 3, 4 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மேல்மங்கலம்வரை சென்று வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. பிரதானமான வைகை அணையை உள்ளடக்கிய முதலக்கம்பட்டி பஞ்சாயத்தில் கிராம நிருவாக அலுவலகம் இல்லாததை அறிந்து, நான், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6 இலட்சம் ஒதுக்கீடு செய்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதி இதற்குப் பொருந்தாது என்று அறிவித்ததால், அது திரும்பப் பெறப்பட்டது. இந்தச் சூழ்நிலையில், அங்கே ஒரு கிராம நிருவாக அலுவலகம் வேண்டுமென்று தொடர்ந்து நானும் வலியுறுத்தி வருகிறேன். இப்பொழுது கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்தில் கிராம நிருவாக அலுவலர் செயல்பட்டு வருகிறார். பிரதானமான வைகை அணையை உள்ளடக்கிய அந்தப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றனவா என்று D.R.O., கலெக்டரிடம் நான் கேட்டபோது அவர்களும் இருப்பதாக அறிவித்தார்கள். ஏராளமான அலுவலகங்கள் இருக்கிற இந்தப் பகுதியில் கிராம நிருவாக அலுவலகம் கட்ட அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருப்பதனாலும், நானும் கலெக்டரிடம் இதுபற்றி குறிப்பிட்டு இருப்பதனாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விவரங்களை உள்வாங்கிக் கொண்டு, V.A.O.–வுக்கு ஓர் அரசு அலுவலகம் இல்லாத ஒரு சூழ்நிலையை மாற்றிட உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதி, முதலக்கம்பட்டி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை. ஆனாலும், மேல்மங்கலம் பிட்—II வருவாய்க் கிராமத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, முதலக்கம்பட்டி ஊராட்சி உட்பட வைகைபுதூர், வைகை அணை, தாயமங்கலம், கீழகாமக்கம்பட்டி, மேலகாமக்கம்பட்டி ஆகிய உட்கடை கிராமங்கள்* hamlet villages *அமைந்துள்ளன. மேல்மங்கலம் பிட்—II கிராம நிருவாக அலுவலகம், மேல்மங்கலம் பிட்—I கிராமத்தின் உட்கடை கிராமமான* hamlet village *மேல்மங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது. இது பழமையான கட்டடமாக உள்ளது. மேல்மங்கலம் பிட்—II வருவாய்க் கிராமத்தின் மையத்தில் முதலக்கம்பட்டி அமைந்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், முதலக்கம்பட்டியில் மேல்மங்கலம் பிட்—II கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டப்பட்டால் பொதுமக்களுக்குப் பயனுள்ளதாக அமையும். மேல்மங்கலம் பிட்—II கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்தும், பொதுப் பணித் துறையிடமிருந்தும் பெறப்பட்ட தோராய மதிப்பீடு அறிக்கையுடன் செயற்குறிப்பும் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, பெரியகுளம் தொகுதி, மேல்மங்கலம் பிட்—II வருவாய்க் கிராமத்திற்கான கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் முதலக்கம்பட்டி ஊராட்சியில் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இதுவரை, கடந்த 5 ஆண்டுகளில் 8,000 கிராம நிருவாக அலுவலர்களை நியமித்து, ஏறத்தாழ ரூ.410.99 கோடி அளவில் 500 வருவாய்க் கிராமக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து, வருவாய்த் துறை வரலாற்றிலேயே இல்லாத வகையில் கட்டடங்களை உருவாக்கித் தந்த முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்ட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதன்மீது, உரிய நடவடிக்கையைத் தாங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை என்பதனால் துணைக் கேள்வியாகக் கேட்கிறேன். என்னுடைய பெரியகுளம் தொகுதி, ஊஞ்சான்பட்டி பஞ்சாயத்தில் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 100 நரிக்குறவ மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த மக்களுடைய வாரிசுகள் பலபேர் இன்றைக்கு வீதிகளிலே சமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. லாசர், மூலக்கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் திடீரென்று எழுந்திருந்து கேள்வி கேட்டால் எப்படி? (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேள்வி கேட்டால் எப்படி? (குறுக்கீடு) உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

57—

ஆவின் பாலகம்

***52514—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி திருக்கடையூரிலுள்ள அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் உடனுறை அபிராமி அம்மன் திருக்கோவில் பகுதியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?